# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
## (கூட்டிணைத்தல்)

**இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) கோகிலா
குணவர்தன அவர்களால் 2023, மாச்சு மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, பெப்ருவரி மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***169 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை பயிற்சி மற்றும் அபிவருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை பயிற்சி மற்றும் அபிவருத்தி நிறுவகம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

"இலங்கை பயிற்சி மற்றும் அபிவருத்தி நிறுவகம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான நிலையமொன்று, அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும், கருமங்களையும் கொண்டு நடாத்தி நிறைவேற்றும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகமானது எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் அது தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாகக் கொண்டுநடாத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளதாலும், கூட்டிணைக்கப்பட அது விண்ணப்பித்துள்ள தாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை பயிற்சி மற்றும் அபிவருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை பயிற்சி மற்றும் அபிவருத்தி நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் தற்போது சொல்லப்பட்ட இலங்கை பயிற்சி மற்றும் அபிவருத்தி நிறுவகத்தின் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், "இலங்கை பயிற்சி மற்றும் அபிவருத்தி நிறுவகம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாகவிருத்தல் வேண்டும்: அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்: பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) பல்வேறு தரத்தினவான உறப்பாண்மை மூலம் அதன் உறுப்பினர்களுக்கு உயர்தொழில்சார் அங்கீகாரம் வழங்குதல்;

(ஆ) உயர்தொழில்சார் உறுப்பினர்களின் வேலை மற்றும் நடத்தை தொடர்பாக நல்லொழுக்க மற்றும் உயர்தொழில் சார் தராதரங்களை உருவாக்குதலும், ஊக்கப்படுத்துதலும், ஆதரவளித்தலும், இது தொடர்பாக அவசியமானவையும் உசிதமானவையுமான நடவடிக்கைகளை எடுத்தலும்;

(இ) உள்ளூரிலும் வெளிநாட்டிலும் உள்ள இதையொத்த உயர் தொழில் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணுதல்;

(ஈ) பொதுவாக உயர்தொழிலின் நலனுக்கு அச்சுறுத்தலாக பிரச்சினைகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் அதிகாரிகளுடன் கலந்துரையாடுதல்;

(உ) உறுப்பாண்மையினரிடையே சமுகச் செயற்பாகுளை உறுக்குவிப்பதன் மூலம் உயர்தொழில்சார் ஒருமைப்பாட்டுணர்வை மேம்படுத்துதல்;

(ஊ) அங்கத்தவர்களுக்காக ஒழுக்க நெியையும், தொழில் சார்ந்த நிபுணத்துவத்தையும் உருவாக்குதல், ஊக்கப்படுத்துதல் வளர்த்தல் என்பனவற்றுடன் இது சம்பந்தமாக வேண்டியதும் விரைவானதுமான நடவடிக்கைகளை எடுத்தல்;

(எ) பயிற்சியளிக்கும் உயர்தொழில்சார் ஆட்களுக்கான பிரதிநிதித்துவ ஏற்பாடு செய்தலும் அதன் பராமரிப்பை ஊக்கப்படுத்தலும், பயிற்சியளிக்கும் தொழில்சார் ஆட்களின் நன்மைக்காகவும், சீர்திருத்தத்துக்காவும் தகவல்களையும், கருத்துக்ககளையும், முறைமைகளையும், நுணுக்கங்களையும் சேகரித்தலும், ஒன்றுதிரட்டலும், ஒருங்கிணைத்தலும் விநியோகித்தலும்;

(ஏ) பயிற்சியுடன் தொடர்புபட்ட விடயங்கள் பற்றியும், பிரச்சினைகள் பற்றியும் கலந்துஜரயாடல், ஆய்வு மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்கு ஆதரவளித்தலும் அவற்றை ஊக்குவித்தலும், உற்சாகப்படுத்தலும், வசதிவாய்ப்பளித்தலும், அவை பற்றிய தகவல்களைப் பரப்புதலும்;

(ஐ) இலங்கை ஒழுங்கமைப்புகளிடையே கற்கும் கலாசாரம் ஒன்று உற்சாகப்படுத்தலும், ஆதரவளித்தலும், மேம்படுத்தலும்;

(ஒ) ஒழுங்கமைப்புகளில் முகாமைத்துவத் தகைமைகளின் மட்டத்தை உயர்த்துவதற்காக ஒழுங்கமைப்புசார் மட்டத்தில் மனித மூலவள அபிவிருத்தி நடவடிக்கை முயற்சிகளைத் தீவிரமாக முன்னேற்றுதல்;

(ஓ) உறுப்பினர்களும் அவர்களின் கழகங்களும் தத்தமக் குள்ளே மறைந்துகிடக்கும் ஆற்றல்களை போட்டாபோட்டி அனுகூலத்துக்கான ஒரு வழிவகையாக முன்னேற்றத் துக்கு உதவுவதற்காக அறிவு முகாமைத்துவ முன்னணி களுடன் தீவிரமாக ஈடுபடுதலும் அவற்றைக் கண்டறித லும்;

(ஔ) பொதுவாக நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது செயல்துணை நிலையான ஏனைய அத்தகைய கருமங்கள் யாவற்றையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைவாக, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அதற்கிணங்கத் தெரிவு செய்யப்பட்ட, பதவி தாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டதாக இருக்கும் முகாமைக் குழுவொன்றி னால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற கழகத்தின் முகாமைக் குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக் கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டு இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவையாயிராத விதிகளை, உறுப்பினர்களைச் சேர்த்தல், வெளியேற்றதல், திருப்பப்பெறுதல் முகாமைச் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்தல், முகாமைச் சபை உறுப்பினர்களின் கடமைகளும், பணிகளும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவரிகளினதும் மற்றும் சேவையாளர்களினதும் கடமைகளினதும், பணிகளினதும், தத்துவங்களையும், நடத்தையும், கூட்டுத்தாபனத்தினதும், முகாமைக்குழுவினதும் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடைமுறையும், பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை

முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துலும், ஆகிய கருமங்கள் எல்லாவற்றிக்கும் அல்லது அவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவேணும் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுருக்கும் நிறுவகத்தின் விதிகள், அவைகள் இச்சட்டத்துடன் ஒவ்வாதனவாகவிராத அறவுக்கு இப்பிரிவின் கீழாக்கப்பட்ட விதிகளாகக் கருதுப்படுவதுடன் அவை மாற்றப்படவும் சேர்க்கப் படவும் திருத்தப்படவும் அல்லது நீக்கப்படவும் முடியும்.

(3) தற்போது அமுலில் இருக்கும் நிறுவகத்தின் எவ்விதிகளோ அல்லது இதனகத்துப் பின்னர் செய்யப்படும் எவ்விதிகளோ ஒரு பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர் களின் மூன்றில் இரண்டு பங்கினருகளுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டே மாற்றப்படவும், சேர்க்கப்படவும், திருத்தப்படவும் அல்லது நீக்கப்படவும் முடியும். எவ்வாறாயினும் அப்படியான மாற்றமோ, சேர்ப்போ, திருத்தமோ அல்லது நீக்கமோ முகாமைச் சபையின் அனுமதியின் பின்பே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையானது கூட்டுத்தாபத்தின் வரவு, செலவு பற்றிய முறையான புத்தகங்கள் பேணப்படுவதை உறுதிசெய்தல்வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், முகாமைச் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகுதி பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவில், ''தகுதி பெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் ஒரு அங்கத்தவராக இருப்பவர் அல்லது சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட வேறு ஏதாவது நிறுவகத்தின் சபையினால் கணக்காளராகத் தொழில் செய்ய வழங்கப்பட்ட ஒரு தராதரம் பத்திரத்தை வைத்திருக்கும் ஒருவர்; அல்லது

(ஆ) வதிவிடப் பங்குதாரர்கள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் ஒரு அங்கத்தவராகவோ அல்லது சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு தராதரம் பத்திரத்தை வைத்திருக்கும் ஒருவராகவோ இருக்கும் ஒரு கணக்காளர்கள் நிறுவனம்.

*ஆதனங்களையும் பணத்தையும் பெறுவதற்கான கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்*

**7.** (1) கொள்வனவு, கொடை, மானியக்கொடை, நன்கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்ற வகையில் அல்லது வேறு வகையாக உரித்தாக்கக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கவும் அல்லது கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படும் அல்லது சேகரிக்கப்படும் இப்படியான ஆதனங்களை கையுதிர்க்கச் சட்டத்தின் ஆற்றலுடையதாதலும், இயலுமானதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதனது நோக்கங்களை மேம்படுத்துவதற்காக கடன் பெற்றுக்கொள்வதற்கும் அல்லது பாதுகாப்பு ஒன்றை வழங்குவதன் மூலம் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏதாவது கடனை அடைப்பதற்கும், கூட்டுத்தாபனம் கடப்பாடு உடையவற்றிற்கு ஏற்ற முறையில் நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரம் உடையதாய் இருக்கும்.

(3) கூட்டுத்தாபனம், சந்தாப்பணம், நன்கொடைகள், அன்பளிப்புகள் ஆகியவற்றை பணமாகவோ சேவையாகவோ பெற்றுக் கொள்வதோடு நிதியத்தையும் உயர்த்திக் கொள்ளலாம்.

(4) இந்தச் சட்டத்தின் அல்லது விதிகளின்கீழ், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுவனவையும் சேகரிக்கப்பட்டவனவையுமான எல்லா அசையும் அசையா சொத்துகளும், கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட, செலவு செய்யப்பட்ட எல்லா பணங்களும், அதன் விதிகளுக்கிணங்கவும் அதன் நோக்கங்களை மேம்படுத்துவதற்காகவுமே பாவிக்கப்படுபனவையாகவும் பிரயோகிக்கப்படுபனவையாகவும் இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை*

**8.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். அத்துடன் தலைவரினது அல்லது கூட்டுத்தாபனத்தினது அப்போது அமுலிலிருக்கும் விதிகளின் பிரகாரம் அனுமதி அளிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் யாராவது உத்தியோ

கத்தர்களின் சமுகத்திலன்றி எத்தன்மைத்தான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாது. இவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கடையாளமாக தமது பெயர்களை எழுதி அச்சாசனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஒரு ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்

**9.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, இறுவிருப்பாவணக்கொடை நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையில், பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கின்றவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், பணிகளை நிறைவேற்றுகையிலும் அதனால் கூறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவையான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பணங்கள், சொத்துக்களை எக்கணம் பிரயோகிக்கலாம் என்பது

**10.** கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் எந்தவோரு பாகமும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு பங்கிலாபம், கடன் மிகை ஊதியம் என்ற வகையில் அல்லது வேறெந்த வகையில் நேரடியாக அல்லது மறைமுகமாக, இலாபம் என்ற முறையில் செலுத்தப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் ஆகாது.

சங்கத்தினால் செல்மதியாக வுள்ளனவும், அதற்குச் செலுத்தபட வுள்ளனவுமான கடன்கள்

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்துக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தினத்தன்று நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள கடன்கள், ஒப்பப்பணங்கள் உதவுதொகைகள் ஆகியன எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்படல்*

**12.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய அங்கத்துவத் தொகையைத் தவிர ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைத்தலில் எஞ்சியிருப்பதான ஆதனம்*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது: அத்தகைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைக் கொண்ட வேறெவையேனும் நிறுவனங்களுக்கு கொடுக்கப்படலாம் அல்லது கையளிக்கப்படலாம்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கை குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.